**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.115/2009**

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 24.11.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கண்ணன் (PW–2) | வயது | : | 67 /2025 |
| த/க பெயர் | : | திரு. பிச்சை | தொழில் | : | சுயதொழில் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். நான் இன்று இந்த வழக்கு சம்மந்தமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொண்டு உத்தரவிடுமாறு பிரார்த்திக்கிறேன்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) செங்கம்மாள் எனது அம்மா என்றால் சரிதான். எனது அம்மாவிற்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஐந்து ஆண் மகன்களும், இரண்டு பெண் மகள்களும் உள்ளனர். எனது தாயாருக்கு சொந்தமாக மன்னார்குடி நகரம், செம்மங்குளத்தில் நிறைய சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். அவரிடமிருந்த சொத்துக்களை உயில் மூலமாகவும், செட்டில்மெண்ட் மூலமாகவும் அனைத்து குழந்தைகளுக்கும் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் டி.எஸ்.எண்.2349 மற்றும் 2350. விஸ்தீரணம் 930 சதுரடி.
2) சாட்சியம் அளிப்பதற்கு முன்பு எந்த சர்வே எண்ணிற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதியானவர் எனது அண்ணனின் மனைவி என்றால் சரிதான். தாவா சொத்து டி.எஸ்.எண்.2349 சொத்தானது எனது அண்ணனுக்கு எவ்வாறு கிடைத்து என்றால் எனது அம்மா எனது அண்ணனுக்கு 1992 இல் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தன் மூலம் கிடைத்தது. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனக்கும் சொத்து எழுதி கொடுத்தாரா என்றால் இல்லை.
3) எனது அம்மா எனது அண்ணனுக்கு 1992 இல் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். அந்த ஆவணத்தை இந்த வழக்கில் எனது அண்ணி தாக்கல் செய்தாரா என்றால் செய்துள்ளார். வா.சா.,ஆ.1 ஆவணமான செட்டில்மெண்ட் ஆவணமான விபரங்கள் அனைத்தும் உண்மையானது என்றால்

சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் நானும் எனது அண்ணன் வைரக்கண்ணு, சேட்டு ஆகியோர் கையெழுத்திட்டுள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் டி.எஸ்.எண்.2350 விஸ்தீரணம் 1300 சதுரடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) வா.சா.ஆ.1 ஆவணத்தில் தனது கணவருக்கு கிடைத்த சொத்திற்கான மூல பத்திரமாக இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது அம்மா எனது அண்ணனுக்கு டி.எஸ்.எண்.2350 விஸ்தீரணம் 1300 சதுரடி எழுதி கொடுத்ததில் நாங்கள் சாட்சி கையெழுத்திட்டோம் என்றால் சரிதான். எனது மூத்த அண்ணன் மணி எப்போது இறந்தார் என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்னர் இறந்தார். எனது அண்ணன் மணி எனது அண்ணி வாதி தவமணிக்கு வா.சா,.ஆ.4 ஆவணமான செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் டி.எஸ்.எண்.2349 விஸ்தீரணம் 963 சதுரடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) எனது அம்மா எனது அண்ணனுக்கு டி.எஸ்.எண்.2350 விஸ்தீரணம் 1300 சதுரடி இடத்தை தான் செட்டில்மெண்ட் ஆவணமாக எழுதி வைத்தார் என்றால் சரிதான். டி.எஸ்.எண்.2350 சொத்து மட்டுமே எனது அம்மா எனது அண்ணனுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி வைத்திருந்தும் தனக்கு உரிமையில்லாத டி.எஸ்.எண்.2349 விஸ்தீரணம் 963 சதுரடி இடத்தை வாதிக்கு எவ்வாறு எழுதி கொடுத்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தானது எனது அண்ணனுக்கு எனது அம்மா இனாம் செட்டில்மெண்ட் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

6) வாதியானவர் தவறான சர்வே எண்ணை கொண்டு தாக்கல் செய்த இந்த வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தனக்கு உரிமையில்லாத சொத்தை வாதிக்கு எழுதி கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.25 10:15:42 +0530

District Munsif
Mannargudi.